# புத்தாட்சி அமைக்கப் பொருளாதார நிபுணர்கள் தேவை!

## ஏழை - பணக்காரன் என்ற பேதம் வளர்ந்துவிடும் காணவேண்டும்

## பொருளாதார நிலை சீர்ப்பட்டாலன்றி புது வாழ்வு கிட்டாது

### பொருளாதார வல்லுநர் நடராசன் கருத்துரை

விவசாயம் இன்றும் பழைய நாளில் இருந்தபடிதான் இருக்கிறது. ஒருவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. ரசாயன முறையொன்று கண்டு பிடிக்கப்பட்டிருப்பதானது, ஒரு 6-வது கண்டத்தையே கண்டு பிடித்தது போலாகும். நாம் நவீன முறையில் விவசாயத்தை வளர்க்க வேண்டும். இதில் நாம் முழு கவனமும் செலுத்தவேண்டும். ராஜீய வாதிகள் பொருளாதார நிபுணர்களுடன் நெருங்கி உழைக்க வேண்டும். இது மிக்க பலன் தரக் கூடியதாகும். இன்னும் சொல்லப்போனால், கொஞ்ச காலம் நாட்டின் புனர் அமைப்புத் திட்டத்தைப் பொருளாதார நிபுணர்கள் கையில் ஒப்படைக்கட்டும். எவ்வளவு தூரம் நாடு முன்னேறுகிறது என்பதைப் பார்க்கலாம். வக்கீல்கள் ஆண்டு விட்டார்கள்; மதத் தலைவர்கள்கூட ஆண்டு விட்டார்கள். ஆனால் பொருளாதார நிபுணர்களுக்கு இன்னும் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. அது கிடைத்தால் நிச்சயம் நல்ல பலன் ஏற்படும்.

பணக்காரன் மேலும் பணக்காரனாவதற்கும், ஏழை மேலும் ஏழையாவதற்கும் ஏதுவான சூழ் நிலைகளையெல்லாம் விலக்கி பொருளாதார வாழ்வைச் சீர்படுத்த வேண்டும். இந்த வகையில் முன்னேற பொருளாதார நிபுணர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்தால், வெகு விரைவில் நாட்டை நல்ல முறையில் திருத்தி அமைக்க முடியும் என்று நான் உறுதி கூறுகிறேன்.

குடந்தை அரசியலார் கல்லூரி சரித்திர பொருளாதார கழகத்தில் சொற்பொழிவாற்றிய, சென்னை அரசாங்க பொருளாதார ஆலோசகர் டாக்டர் பி. நடராசன் மேற்கண்டவாறு பேசியிருக்கிறார்.

இந்நாட்டு விவசாயத் தொழில் முன்னேற வேண்டுமானால், விஞ்ஞானம் அதில் இடம் பெறவேண்டும் என்பதை நாம் பலதடவை சுட்டிக் காட்டியுள்ளோம். "விஞ்ஞான வளர்ச்சியுள்ள இந்தக்காலத்தில் நிலமில்லாமல் ஆகாயத்தில் கூட சாகுபடி செய்யலாம்" என்று தோழர் நடராசன் கூறியிருப்பது, விவசாயத்துக்கு விஞ்ஞானம் எத்துணை இன்றியமையாதது என்பதை விளக்கத்தக்க உரையாகும். ஆனால் வருந்தத்தக்க வகையில் இந்நாட்டில் விஞ்ஞானத்திடம் மக்களுக்குப் பற்றுதல் ஏற்படாத அளவுக்கு இயந்திரங்கள் பேய்களென்றும், பிசாசுகளென்றும், இயந்திர உற்பத்தியினால் நாடே கெட்டுவிடும் என்றும் மக்கள் கற்பிக்கப்பட்டுவிட்டனர். இந்நிலை மாற வேண்டும். மாற வேண்டுமானால், அரசியல் பொருளாதார நிபுணர்கள் வசம் சிக்க வேண்டும்.

வருந்தத்தக்கவிதத்தில் பல காலமாக இந்நாட்டு அரசியல் பதவிப்பித்தர்களிடமும், பழமைப்பித்து கொண்டோரிடமும் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறது. தோழர் நடராசன் குறிப்பிடுவதுபோல் வக்கில்களும், மதவாதிகளும் ஆட்சிப்பீடத்திலிருந்திருக்கிறார்களே தவிர, பொருளாதாரம் அறிந்த அறிஞர்கள் இருந்ததில்லை. பொருளாதார அறிஞர்கள் ஆட்சிப்பீடத்தில் அமராததுகூட அவ்வளவு கேடு பயப்பதாகாது. 'தியாகிகள்' என்ற பெயரில அரசியல் அரிச்சுவடிகூட அறியாத அன்பர்கள் பலர் ஆட்சிப்பீடமேறியதுதான் அதிசயத்திலும் அதிசயம்!

மற்ற நாடுகளில் ஆட்சிப்பீடத்தில் அமருவோர் சரித்திரம், பொருளாதாரம் முதலியன ஓரளவு அறிந்தவர்களாக இருப்பர். இந்நாட்டில் பதவி பெற அப்படிப்பட்ட படிப்புகளே தேவையில்லை! அரசியல் தியாகி என்ற பட்டம்; கதருடை தரித்த மேனி, காந்தியத்தின் மகத்துவமே சும்பண்பு, மாற்றுக கட்சியினரைத் தாக்கிப் பேசும் ஆற்றல் முதலியனவே பதவிக்குரிய தகுதிகளாக மதிக்கப்படுகின்றன இங்கு.

இத்தகையபண்பாடுகளுக்கு முக்கியத்வம் கொடுத்த காரணத்தினால், இந்நாட்டு அரசியல் பாழ்பட்டுப் போயிற்று எனலாம். பதவிப் போட்டி பலப்படுவதற்கும் இதுவே காரணம். இங்ஙனம் பதவியைப் பெறுவதே குறிக்கோளாகக் கொண்டுவிட்ட காரணத்தால் ஆட்சியாளர் உள்ளத்தில் மக்கள் நலம் நாடும்பண்பு இடம் பெறாமற் போயிற்று. இப்படிப்பட்ட நிலை அடியோடு மாறவேண்டும்.

அரசியல் என்பதே பொருளாதார இயலை அடிப்படை

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

Phone No 4502 | Regd. No. M. 5458
விலை அரை அணா | இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (17—2—50) ❁ வெளியூர் (18—2—50) [ இதழ் 171

## ஸ்டாலினை மிரட்டி பணிய வைப்பாராம்!

—————(0)—————

### தோழர் சர்ச்சிலின் தேர்தல் பிரசாரம்

நியூயார்க், பிப். 16—

தான் பதவிக்கு வந்தால் ஸ்டாலினுடன் நேருக்கு நேர் பேசி மிரட்டல் யுத்தத்தை நிறுத்தி, சமரஸம் ஏற்படுத்த முடியும் என்று, வின்ஸ்டன் சர்ச்சில் செய்த ரேடியோ பிரசங்கம் யூனைடெட் ஸ்டேட்ஸ் பத்திரிகைகளில் பிரதானமாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

சர்ச்சில் தேர்தல் பிரசாரத்தில் அயல்நாட்டுக் கொள்கை விஷயமாக கட்சிக் கட்டுப்பாட்டை மீறி தலையிட்டு 'அணுக்குண்டை' வீசி எறிந்துவிட்டார் என்று, நியூயார்க் டைம்ஸ் கூறுகிறது.

இதன் மூலம் பிரமாதமாக எதையும் சர்ச்சில சாதித்துவிட முடியாது என்று நியூயார்க் ஹெரால்ட் ட்ரிபியூன் எழுதுகிறது.

இதுபற்றி 'ட்ரிபியூன்' பத்திரிகை எழுதுகையில், பேசி சமரஸம் ஏற்படுத்துவதாக சர்ச்சில் சொல்வது அட்லாண்டிக்கிற்கு இருபுறமும் இருக்கும் நாடுகள் கட்டாயம் வரவேற்கும் என்றாலும், சர்ச்சில் தன் வாக்குறுதிகளைக்காப்பாற்றுவதில்லை என்பதுடன் இது நடக்காத அனுபவசாத்தியமற்ற காரியம் என்பதைக் கவனிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறது.

## அரபுத் தலைவர்கள் மாநாடு

டமாஸ்கஸ், பிப். 16—

அரபுத் தலைவர்கள் மாநாட்டின் தேதியை நிர்ணயிப்பது பற்றி பேச்சுவார்த்தைகள் டமாஸ்கஸுக்கும் கெய்ரோவுக்குமிடையே நடைபெற்று வருகின்றன. தேதி நிர்ணயமானதும் எகிப்து எல்லா அரபு நாடுகளுக்கும் அறிவிக்கும். இச்சமயத்தில் அரபு லீக் அரசியல் கமிட்டி கூட்டமும் நடைபெறலாம் என்று தெரிகிறது.

## கம்யூனிஸ்டு கைதிகள் மீது வழக்கு

சேலம், பிப். 15—

சேலம் மத்திய சிறையில் அண்மையில் ஏற்பட்ட கலவரம் சம்பந்தமாக கம்யூனிஸ்டு கைதிகள் மீது போலீசார் இ. பி. கோ. 147, 323 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளனர். போலீஸ் உதவி இன்ஸ்பெக்டர் ஜனரல் தோழர் எஸ். பார்த்தசாரதி (அய்யங்கார்) சேலத்தில் முகாம் போட்டிருக்கிறார்.

டமாஸ்கஸ், பிப். 16—

ஸிரியாவில் நிலவுள்ள துருக்கியர்கள் தானியங்களைத் துருக்கிக்கு அனுப்புவதில் சில தடைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டித்து துருக்கி சர்க்கார் ஸிரியாவிற்கு ஒரு கண்டனக் குறிப்பை அனுப்பியிருக்கின்றனர். —ஜூலோப்.

## ஜப்பான்மீது ரஷ்யா கண்ணோட்டமாம்!

### "மான்செஸ்டர் கார்டியன்" கவலை!

லண்டன், பிப். 16—

செஞ்சீனாவை, தான் சொன்னபடி எல்லாம ஆடவைப்பதற்கு ரஷ்யா வெற்றி பெற்றிருக்க வேண்டும். ரஷ்யா தன் கண்ணோட்டத்தை ஜப்பான் பக்கம் திருப்பலாம் என்றும் குறிப்பிட்டு "மாஞ்செஸ்டர் கார்டியன்" தலையங்கம் எழுதியிருக்கிறது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

ஜப்பானிய சமாதான உடன்படிக்கை விஷயமாக மேற்கு நாடுகளுக்கும், ஜப்பானுக்கும் உடன்படிக்கை எதுவும் ஏற்படும் என்று நம்ப இடமில்லை. ஜப்பான் தனியாக விடப்பட்டால் அதுஜனநாயகநாடாக ஆகலாம். ஜப்பான் விஷயமாக பின் கண்ட இரண்டில் ஒன்று ஏற்படலாம் என்ற நிலைமை இருக்கிறது. ஜப்பானிய சர்க்கார் மிகத் தீவிரமாகப் போய் பழைய போலீஸ் ராஜ்யத்தையே ஏற்படுத்தலாம். அல்லது கம்யூனிஸ்டுகள் ஆட்சி அங்கு ஏற்படலாம்.

ஜப்பானைத் தன் ஆதிக்கத்தில் பொம்மைநாடாகச்செய்யவே ரஷ்யா விரும்புமேயல்லாது, செஞ்சீனாவைப் போல சம அந்தஸ்துள்ள நாடாக விட்டுவைக்கரஷ்யாவிருப்பப்படாது.

இம்மாதிரியான நிலைமை இருப்பதால் மேற்கு வல்லரசுகள் ஜப்பான் சம்பந்தமான தங்கள் நீண்டகால கொள்கை என்ன என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். ஆசியாவில் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட, மேற்கு வல்லரசுகள் வழி செய்தால் கம்யூனிஸ்டு ஆபத்து தலை தூக்கமுடியாதபடி செய்யலாம்.

## பாகிஸ்தான் விஞ்ஞான மாநாடு: இந்திய விஞ்ஞானிகளை அழைக்கவில்லை!

### பாகிஸ்தானின் "பதிலுக்குப் பதில்" நடவடிக்கை

கராச்சி, பிப் 15—

மார்ச் 24-ந்தேதி முதல் 28-ந் தேதி வரை இங்கு நடைபெறவிருக்கும் அறிவியல் மாநாட்டிற்கு, இந்திய விஞ்ஞானிகள் அழைக்கப்பட மாட்டார்கள் எனத்தெரிகிறது. அண்மையில் பூனாவில் நடைபெற்ற இந்திய அறிவியல் மாநாட்டிற்கு, பாகிஸ்தான்விஞ்ஞானிகள் அழைக்கப்படாததற்காகவே இந்த "பதிலுக்குப் பதில்" கையாளப்படுகிறதெனத்தெரிகிறது. எப்படியும் மற்ற எல்லா காமன்வெல்த் நாட்டு விஞ்ஞானிகளுக்கும், பாகிஸ்தான் அழைப்பு அனுப்பும் எனத்தெரிகிறது.

## மாசுபடியும் மன்னர் முடி!

———

### சுத்தம்செய்யும் பரம்பரைப்பணி!

லண்டன். பிப், 13—

லண்டன் டவரில் ரூ. 26,00,00,000 மதிப்புள்ள பிரிட்டிஷ் மன்னரின் முடியிலுள்ள வைரக் கற்களை ஆண்டு தோறும் சுத்தம் செய்யும் வேலை ஒரு பிரிட்டிஷ் வைரக் கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இக் கம்பெனி சென்ற 100 ஆண்டுகளாக இவ்வேலையைப் பரம்பரையாகச் செய்து வருகிறது.

இம் முடி சுத்தம் செய்யும் 3-நாட்கள் மட்டும் லண்டன் டவர் மூடப்பட்டிருக்கும். அச்சமயம் விசேஷ பாதுகாப்பு எதுவும் செய்யப்படுவதில்லை.

———

அம்மான், பிப். 16—

இஸ்ரேல் நதிக்கு இருபுறமுள்ள ஜார்டன், பாலஸ்தீன கோர்ட்டுகளில் ஒரே மாதிரியான சட்டம் ஏற்படுத்த இரு தரப்பு சட்ட நிபுணர்களும் ஒன்று கூடி யோசித்து வருகின்றனர் என்றும், இதற்காக ஒரு சோதனை நடைபெற்று வருகிறது.

# மாலை மணி

சென்னை 17—2—50 வெள்ளிக்கிழமை


## இந்தோசீனா

அடிமை நாடுகளைக் கொத்தித் தின்று, கொழுத்து வாழ்வதிலே, ருசி கண்டுகொண்டுள்ள ஏகாதிபத்திய வல்லூறுகள், இப்பொழுது இந்தோசீனாவின் மீது வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தோசீனாவில் உரிமை வேட்கை கொண்டு, சுதந்தரக் குடியரசு காண துடித்துக்கொண்டிருக்கும் மக்களின் உரிமையுணர்ச்சியைக் கொத்தித் தின்ன அந்த வல்லூறுகள் ஆவலுடன் காத்துக்கிடக்கின்றன. பல ஆண்டுகளாக இந்தோசீனர்களின் இரத்தத்தை உறிஞ்சி வந்துகொண்டிருக்கும் பிரெஞ்சு வல்லூறுக்கு உதவிபுரிவதற்காக அமெரிக்க வல்லூறும், பிரிட்டிஷ் வல்லூறும் ஆலவட்டம்போட ஆரம்பித்திருக்கின்றன.

ஏகாதிபத்தியப் பிடியினின்றும் விலகிக் குடியாட்சி புரியத் தொடங்கியிருக்கும் இந்தோனேஷியா ஒரு பக்கம்; பிற்போக்கு ஆட்சியின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, சமதர்ம ஆட்சிபுரியத் தொடங்கியிருக்கும் செஞ்சீனா மற்றோர்பக்கம். இவையிரண்டிற்கும் இடையே இந்தோசீனா! இரு பக்கங்களிலிருந்தும் சுதந்தரத் தென்றல் வீச, எத்தனை நாட்களுக்குத்தான் அதன் இன்ப நுகர்ச்சியைப் பெறாமல் இந்தோசீனா அடிமைத் தீக்குழியில் கிடந்து உழலும்! இந்தோனேஷியாவிலும், சீனாவிலும் உரிமைப் போரொலி கிளம்பத் தொடங்கிய காலத்திலே, இந்தோசீனாவும் உரிமை முழக்கத்தை முழப்பக் கற்றுக்கொண்டுவிட்டது. அதன் விளைவாக இந்தோசீனாவில் சுதந்தரக் குடியரசு ஹோசிமின் தலைமையில் உருவாயிற்று.

குடியரசு ஆட்சி ஒருபுறம், பிரெஞ்சு ஏகாதிபத்திய ஆட்சி மற்றோர்புறம். ஆக இரண்டு ஆட்சிகள் இந்தோசீனாவை நடத்தத் தொடங்கும் காலம் வரையில், வல்லரசுகளின் கண்கள் இந்தோ-சீனாவின் மீது விழவில்லை. பிரெஞ்சு ஏகாதிபத்யவல்லரசே, வெற்றி பெறுமென்ற எண்ணத்துடன், இந்தோ-சீனாவின் சுதந்தர முழக்கத்தைக் கேட்கவும் மறுத்தன, அந்த வல்லரசுகள். உலக சாம்ராஜ்யங்கள் பலவும் நாளுக்கு நாள் சரியத் தொடங்கும் கட்டம் வந்தவுடன், இந்தோசீனாவில் அமைந்திருந்த பிரெஞ்சு சாம்ராஜ்யக் கோட்டையும் சரியலாயிற்று; சுதந்திரக் குடியரசு மலரலாயிற்று.

இந்தோசீனர்களின் ஒருமுக ஆதரவு முழுவதும், குடியரசையும், அதற்குத் தலைமைவகிக்கும் தோழர் ஹோசிமினையும் தாங்கி நிற்கின்றன. பிரெஞ்சு தன் ஆணவ ஆதிக்க பலத்தைக் கொண்டு அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொள்ள ஆசைப்படுகிறது. இந்த ஆசைக்குத் தூபமிடவும், ஆசையை நிறைவேற்றிவைக்கவும் அமெரிக்காவும், பிரிட்டனும் படாதபாடு படுகின்றன.

ஏறக்குறைய சீனாவின் நிலையையே ஒத்திருக்கின்றது இந்தோசீனாவின் நிலையும். சீனாவில் மக்களின் ஆதரவு கம்யூனிஸ்டு அரசாங்கத்தின் பக்கம் இருந்தது; அதுபோல இந்தோசீனாவில் மக்களின் பலம் குடியரசு அரசாங்கத்திடம் இருக்கிறது. சீனாவில் அதிக்கம் செலுத்திய குயோமின்டாங் கட்சியினர்க்கு ஆதரவு தந்தது அமெரிக்கா. அதுபோல, பிரெஞ்சு அதிகாரத்திற்கு ஆதரவு தர முயலுகிறது அமெரிக்கா. சீனக் கம்யூனிஸ்ட் சர்க்கார் ரஷ்யாவின் துணையை நாடினர்; அதுபோலவே இந்தோனேஷியா குடியரசும் ரஷ்யாவின் உதவியை நாடுகிறது. சீனாவில் முடிவு தெரிந்துவிட்டது. இந்தோசீனாவில் இன்னமும் முடிவு தெரியக்கூடியதுதான். மக்களின் உரிமை வேட்கையுணர்ச்சியைமுதலாகக்கொண்டிக்கும் சுதந்தரக்குடியரசுதான் இறுதியில் வெல்லும்! அதற்கு சிறந்த சீனாவே ஏற்ற எடுத்துக் காட்டாகும்!

அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்யங்கள், தென் கிழக்கு ஆசியா நாடுகளுக்கு உதவி செய்ய, வலுவிக்கத் தாமே முன் வருகின்றன. காரணம் தம் ஏகாதிபத்யப் பிடிகளை ஆங்காங்குப் பதிய வைத்துக் கொள்ள ஆவலுறுகின்றன என்பதேயாகும். அதே நிலையில் தென் கிழக்கு ஆசியா நாடுகளில் பலவும் ரஷ்யாவிடம் உதவி கோரி தாமே வலுவிக்கச் செல்கின்றன. இந்த இரண்டு எடுத்துக் காட்டுகளிலிருந்தே உலக அரசியல் அரங்கில் ரஷ்யா வகிக்கும் இடமும், அமெரிக்கா வகிக்கும் இடமும் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். அமெரிக்கா தனது ஆதிக்கத்தை வளர்க்க உதவிகளைத் தேடி அலைகிறது; ஆனால் ரஷ்யாவிடம் உதவிகள் பலவும் தாமே வந்தடைந்து ஆதிக்கத்தை வளர்க்கின்றன. இந்த நிலைமையைக் காணும் அமெரிக்கா பொறாமையுணர்ச்சியினால் தூண்டப்படுவது இயற்கைதானே. ஆகவேதான் ரஷ்யாவின் செல்வாக்கை அடக்க போர் ஒன்றினை எதிர்பார்த்து, அதற்கான ஆயத்தங்களைப் புரிந்து வருகின்றது. போர் துவக்குவதற்கான களமாக இந்தோசீனாவை உபயோகிக்கவும் அது எண்ணுகிறது என்று தெரியவருகிறது. ஆகையினால் தான் தென்கிழக்கு ஆசியாவில் ரஷ்யாதான் முதன் முதலாகப் போரைத் துவக்கப்போகிறது என்று பூச்சாண்டிகாட்டி, உலகினைப் பயமுறுத்த எண்ணுகிறது அமெரிக்கா. வல்லரசுகள் நடத்தும் ஏகாதிபத்ய ஆதிக்கப் போட்டியில் இந்தோசீனா இரையாகி விடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டியது விடுதலைவேட்கைக்கு மதிப்பு தரும் நாடுகள் அனைத்தினுடைய கடமையாகும். அதில் இந்தியாவினுடைய கடமையும் பெரும் பங்கு பொதிந்து கிடக்கிறது என்றால் மிகையாகாது. இந்தியா ஆதிக்க நாடுகளின்பக்கம் அங்கம்வகிக்கிறதா அல்லது சுதந்தரக் குடியரசு அரசாங்கத்தின் பக்கம் இடம் பெறுகிறதா என்பது, ஆளவந்தார்களின் போக்கினைக் கொண்டுதான் அறியவேண்டும்.

சீனாவின் பிரதமர் மா-சே-துங் ரஷ்யாவுடன் முப்பது ஆண்டு ஒப்பந்தம் செய்துகொண்டுவிட்டார். ரஷ்யாவின் உதவியினைப் பெற உறுதி செய்துகொண்டு அவர்சொந்த நாட்டுக்குத் திரும்புகிறார். இந்தோசீனா குடியரசுத் தலைவர் ஹோசிமின் ரஷ்யாவுக்கு புறப்பட்டுவிட்டார். அவரும் ஒப்பந்தம் செய்துகொண்டு திரும்புவார் என்பது உறுதி.

இந்த நிலையில், இந்தோசீன மக்கள் ரஷ்யாவிடம் போகக் கூடாதுஎன்பதிலே வல்லரசுகளுக்கு எண்ணமிருக்குமானால்; பிரெஞ்சு வல்லரசும், அதனைச் சார்ந்திருக்கும் ஏனைய வல்லரசுகளும் இந்தோசீனாவை, அந்நாட்டு மக்களிடம் விட்டுவிட்டுச் சென்றிருக்க வேண்டும். அதைச் செய்யாமல், வல்லடி வழக்குகளுக்கு ஆயத்தம் செய்துகொண்டிருப்பது, உலகை அழிக்க ஏகாதிபத்தியங்கள் சதி செய்கின்றன என்றே கொள்ளவேண்டும்.

சீனா விடுதலை பெற்றுவிட்டது! இந்தோனேஷியா பெற்றுவிட்டது இந்தியத் துணைக்கண்டம் பெற்றுவிட்டது; இனி இந்தோசீனா பெற வேண்டும். இந்தோ சீனாவின் எதிர்காலத்தை அந்நாட்டு மக்கள்தான் முடிவு செய்ய வேண்டுமே யொழிய, வேறு அந்நிய ஆதிக்கசக்தி எதுவும் தலையிடக்கூடாது என்பதே நமது விருப்பமாகும்.

---

## அறிவுக் கதிர்!

**பலருடைய அந்தரங்க ஆசைகளைச்சிலர் யோக்கியமாக வெளிக் காட்டி விடுவதுதான் பேராசை என்பது.**

—ஜி. ஆர். ஜோன்ஸ்

---

### மத்ய கிழக்குக்கு யு. எஸ். வல்லுநர் தூதுக்குழு

டமாஸ்கஸ், பிப். 16—

மூன்று அமெரிக்க வல்லுநர்கள் கொண்ட விவசாயத் தூது குழு சிரியாவுக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிரசிடெண்ட் ட்ருமனின் 4 அம்ச திட்டம் மூலம் சிரியாவுக்கு எம்முறையில் டெக்னிகல் உதவி அளிக்கலாம் என்பதை இக் குழு, சிரிய சர்க்காருடன் விவாதிக்கும்.

இதே குழு லெபனன், எகிப்து, இராக், இரான், பாகிஸ்தான், பர்மா பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கும் செல்லும். அரிசி பருத்தி இவைகள் உற்பத்தியைப் பெருக்கவே ட்ருமனின் இத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

---

# ரஷ்ய-சீன ரகசிய உடன்படிக்கை!

—————(0)—————

## லண்டன் வட்டார அபிப்பிராயம்

லண்டன், பிப். 16—

ரஷ்யாவுக்கும், செஞ்சீனாவுக்குமிடையே ரகசிய உடன்படிக்கைக் கையெழுத்தாகியிருக்க வேண்டும் என்றும், 30 ஆண்டு கால உடன்படிக்கைக்காக இரண்டு மாதங்களுக்கு மேல் பேச்சுவார்த்தை நடந்திருக்க வேண்டியதில்லை என்றும் லண்டன் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

அநேகமாக ஆசியாவில் கம்யூனிஸ்டு ஆதிக்கத்தைப் பரப்புவது சம்பந்தமாகவே இந்த ரகசிய உடன்படிக்கை இருக்க வேண்டும் என்றும், இவ்விஷயம், காரியத்தில்காட்டப்படும் வரையில் வெளியிடப்படாமல் மர்மமாகவே வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் அவ்வட்டாரங்கள் கருதுகின்றன.

---

## வெறுங்காலுடன் நடக்காதே!

### பாட்டா யோசனை கூறுகிறார்!

சென்னை, பிப். 16—

இந்திய சர்க்காரும், மாகாண சர்க்கார்களும் "தெருவில் நடக்கும் பொழுது ஏதாவது காலில் அணிந்துகொண்டு நட; வெறுங் காலுடன் நடக்காதே" என்ற பிரசாரத்தை இந்நாட்டில் நடத்தினால் இதனால் இப்பொழுது ஏற்படும் அநேக தொத்து வியாதிகளும் ஏற்படாது, என்று உலகப் பிரசித்திப் பெற்ற செருப்பு தயாரிக்கும் முதலாளி தாமஸ், ஜெ. பாட்டா கேக்கிரவு ஜோசப் நிருபரிடம் கூறினார்.

இம்மாகாணத்தில் 100-க்கு ஒரு பேர்கள் தான் காலில் ஏதாவது அணிந்துகொண்டு நடக்கின்றனர் என்றும், வெறும் காலுடன் தார் ரஸ்தாவிலோ அல்லது மணற்பாங்கான ரஸ்தாவிலோ அல்லது இசுக் கப்பிச்சாலைகளிலோ நடப்பது பனிக்கட்டிகள் மூடப்பட்டுள்ள ரோடுகளில் நடத்தல் அரனும் என்னென்ன தீங்கு விளையுமோ அதைப்போல் இதிலும் ஏற்படும் என்பதை பாட்டா குறிப்பிட்டார்.

பாட்டாவும் அவர் மனைவியும் இந்தியாவிலுள்ள கம்பெனிகளைப் பார்வையிட்டு, அவைகளுக்கு என்னென்ன தேவை என்பதை நேரில் அறிந்து மிகுந்த குறைந்த விலையில் செருப்புகள் இந்நாட்டில் உற்பத்தி செய்வதற்குச்சுற்றுப் பிரயாணம் செய்கின்றனர்.

---

## சுகப் பிரசவத்திற்கு மின்சார இயந்திரம்!

நியூயார்க், பிப். 16—

சுகமாக பிரசவத்திற்கு உதவ ஒரு புதிய மின்சார இயந்திரத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கின்றனர் இதைப்பற்றிய விவரங்களை அமெரிக்க ஜானல் ஆப் ஆப்ஸ்டெடிரிக்ஸ் அண்ட் ஜினெகோலோஜி மார்கலைன் பிரசுரித்திருக்கிறது.

பிரசவம் சுகமாக ஆகுமா அல்லது கஷ்டபிரசவமா, பிரசவ வலிதானா அல்லது பொய் வலியா என்பதை இக் கருவி மூலம் டாக்டர்கள் கண்டு பிடித்துவிட முடியுமாம்.

கொலம்பியா சர்வ கலாசாலையைச் சேர்ந்த டாக்டர் சார்லஸ் எம். ஸ்டீயர் என்பவர்தான் இதைக் கண்டுபிடித்திருக்கிறார். பெண்களுக்கான ஸ்ரீலன் ஆஸ்பத்திரியில் 4 ஆண்டு காலமாக இந்தக் கருவி பரீக்ஷார்த்தமாகி சுமார் 200 கர்ப்பிணிகள் விஷயத்தில் உபயோகிக்கப்பட்டு வெற்றிகரமாக இருக்கிறதென்று கூறப்படுகிறது. இதன் பெயர் எலெக்டிரோ ஹிட்டிரோகிஸப் என்பதாம். முதல் முதலாக பிரசவ வேதனை ஏற்படும்போது இக் கருவி உபயோகப்படுகிறதாம்.

இக் கருவியின் மூலம் முன்னதாகவே நிலைமையை அறிந்து முன்னேற்பாடாக சிகிச்சைக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்ய முடியுமாம்.

---

## புத்தாட்சி அமைக்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாகக்கொண்டதாகும். எனவே பொருளாதாரம் அறிந்தோரே இனி அரசியலுக்குத் தேவை. பணக்காரன் மேலும் பணக்காரனாவதும், ஏழை மேலும் ஏழையாவதும் ஆன நிலை மாறவேண்டும். இந்நிலை மாற்றமே இன்னல் அகற்றும் வழி. ரஷியா இன்றையத் தினம் இலக நாடுகள் அனைத்திலும் உன்னத நிலையிலிருப்பதற்குக் காரணம், அங்கு நிலவும் பொருளாதார சமத்துவமேயாகும். எனவே தோழர் நடராசன் குறிப்பிடுவது போல் பணக்காரன் எப்படிப் பணக்காரனாகிறான்; ஏழை எப்படி ஏழையாகிறான் என்ற விஷயங்கள் விளக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் பொருளாதார வாழ்வு சீர்பட வழியுண்டாகும். இவை அனைத்துக்கும் அடிப்படையாக வேண்டப்படுவது பொருளாதார நிபுணர்கள் கைக்கு ஆட்சி மாறுவதேயாகும்.

---

# பாராளும் மன்றம் முதல் படைவரிசை வரை பங்கு வேண்டும்!

## சிரியாவில் பெண்களின் உரிமைப் போர்!

டமாஸ்கஸ், பிப். 16—

சிரியாவிற்குப் புதியதாக வகுக்கப்படும் அரசியல் அமைப்பில், சிரியா மாதர்களுக்குச் சரிசமத்துவ அந்தஸ்தும், உரிமையும் கொடுக்கப்பட வேண்டும் என்கின்ற வேண்டுகோள், அரசியல் திட்டம் நகல் கமிட்டிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

சட்டசபை நிர்வாக விவகாரங்களிலும் பங்கெடுத்துச் சேவைசெய்ய வசதி அளிக்கப்பட வேண்டுமென்பதுடன், ராணுவத்திலும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அந்த வேண்டுகோளில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது

---

### கி. ஜெர்மனியில் படைப் பயிற்சி

பேர்லின், பிப். 16—

கிழக்கு ஜெர்மனியிலுள்ள கம்யூனிஸ்ட்கேடெட்டுகளுக்கு ராணுவப் பயிற்சி அளிக்க நூதன ஜெட் விமானங்கள் வருவிக்கப்பட்டிருக்கிறதென்றும், பயிற்சி அளிக்கும் விஷயம் மிக ரகசியமாக நடைபெறுகிறதென்றும், பேர்லின் பத்திரிகை 'அபெண்ட்' அறிவிக்கிறது.

---

பாக்தாத், பிப். 16—

[illegible] தன் சொந்த தனிப்பட்ட முறையிலேயே லண்டன் செல்கிறார் என்றும், [illegible] செய்வது சம்பந்தமாக பேசவல்லவென்றும் இராக் சர்க்கார் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர்.

# கடும் போருக்கு அஞ்சாத் திராவிடம் கதர்க்குல்லாய்களுக்குப் பணிவதா?

## பரம்பரைப் புகழ்பெற்ற திராவிடன் பராரியாய் வாழ்வதா?

—————(0)—————

## நாடு பிரிந்தாலன்றி நாலரை கோடி மக்களுக்கு நல்வாழ்வு கிடையாது!

—————(0)—————

### மதுரையில் பொதுச்செயலாளர் பேச்சு

(நேற்றையத் தொடர்ச்சி)

தியாகத்தை மட்டும் அடிப்படையாகக்கொண்டு நாட்டிலே காரியமாற்றுவது தவறு என்று உங்கள் ஊர் தலைவர் இன்று பேசி இருக்கிறார். நானும் அதைத்தான் சொல்கிறேன். இந்த நாட்டின் பணப்பெட்டியை டில்லியிலேயே வைத்துக்கொண்டால் இது நீதியா? முறைதானா என்று கேட்கிறேன்.

இந்தியாவின் மீது பலர் படை எடுத்தனர். அக்பர் படை எடுத்தார், சந்திரகுப்தன் படை எடுத்தான், கனிஷ்கர் படை எடுத்தார். அசோகன் படைஎடுத்தார், ஔரங்கசீப் படை எடுத்தார். இவர்கள் எல்லாம் விந்தியமலைக்கு மேலே தான் நின்று போக முடிந்ததே தவிர, தமிழ்நாட்டில் வர முடியாதுபோயிற்று. ஆனால் உலகத்திலே முன்மையான நாடு, மேல் நாடுகளுக்கு நாகரீகத்தைக் கற்றுத் தந்த நாடு, நமது தமிழ்நாடு அசோகனால் தனது வாள் முனையால் சாதிக்க முடியாத காரியத்தை இன்று வடநாடு தனது பேனா முனையால் சாதித்து விட்டது. கூடாரமடித்து சாதிக்க முடியாத தமிழ்நாட்டை, வடநாடு கதர்ப்போர்வையையும், கதர்க்குல்லாவையும் காட்டி நம்மைப் பிடித்துள்ளது. எனவே தான் இந்த முறை தவறு என்று கண்டிக்கிறோம்.

**சிறிய நாடுதான் ஆனால்......!**

தேசியத் தோழர்கள் எங்களிடம் வந்து பிரிவினை செய்யக்கூடிய அளவு தமிழ்நாடு பெரியது அல்ல என்கின்றனர் சிறிய நாடு என்பதற்காக ஒரு நாட்டை இகழக் கூடாது இந்தியா யானை போன்றது. அதே நேரத்தில் சிலோன் பூனையைப் போன்று இருக்கிறது. இரண்டும் குடி அரசு நாடுதான். ஜப்பான் சிறிய நாடு தான். ஆனால் ஊசனுடல மடங்கு பெரியது தான். இந்த சைனாவை ஜப்பான் பல ஆண்டுகள் என்ன பாடு படுத்தியது என்பதைத் தேசியத் தோழர்கள் உணர வேண்டும்.

30 கோடி மக்களைக் கொண்டது. சுமார் 4 ஆயிரம் மைல் விஸ்திரம் உள்ளது இந்தியா, இவ்வளவு பெரிய நாடு ஒரே ஆட்சியில் இருப்பதென்பது தான் என்ன நியாயம்? நாங்கள் திராவிட நாட்டைப் பிரிப்பதால் என்ன குடி மூழ்கிப் போய்விடும் என்று கேட்கிறேன். எனவே தான், எங்கள் நல்லெண்ணத்தில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என்று கூறுகிறேன்.

**இங்கு என்ன இல்லை?**

இந்த நாட்டில் கோலாரில் தங்கம் கிடைக்கிறது. சிமிட்டிக்குத் தேவையான மண் இங்கே இருக்கிறது. சேலத்திலே இரும்பு கிடைக்கிறது. திருச்சிக்கு அருகில் நிலக்கரி இருப்பதாக புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். திருவாங்கூரிலே அணுக்குண்டிற்குத் தேவையான யூரேனியம் இருக்கிறது. மற்றும் கப்பல் கட்ட வகை வகையான மரம் எல்லாம் இங்கு கிடைக்கிறது.

அதுமட்டுமல்ல, இயற்கையாகவே நமது நாடு மூன்று பக்கம் கடலாலும், மலைகளாலும் சூழப்பட்டுள்ளது. இதனால் எதிரிகள் இங்கு படை எடுத்து வந்து விடுவான் என்பதற்கு இடமில்லை. இவ்வளவு வளமுள்ள நாடு ஏன் தனியாக வாழ முடியாது?

**மேல்நாட்டைப் பாருங்கள்**

ஐரோப்பாவிலே, இன்று சுயேச்சையாகப் பலசிறு நாடுகள் வாழ்கின்றன. பிரான்சு, ஸ்பெயின், போர்ச்சுகல், நார்வே, ஸ்வீடன், அல்பேனியா, துருக்கி, இத்தாலி, கிரீஸ் போன்ற நாடுகள் பல தனித் தனி ஆட்சி நடத்துகின்றன. இவைகள் தனி ஆட்சி நடத்தும்போது நீர் வளம், நிலவளம் நிறம்பிய நாடு, 4½ கோடி மக்களைக்கொண்ட நாடு ஏன் தனி ஆட்சி நடத்தக் கூடாது என்று கேட்கிறேன்.

மேல் நாட்டு வல்லரசுகள் தங்கள் குறைகளைத் தீர்க்க ஒரு யு. என் ஓ. வைத்துக்கொண்டிருப்பதைப் போல, இந்தியாவில் உள்ளவர்கள் பாகிஸ்தான், திராவிடம், சிலோன் எல்லாம் சேர்ந்த ஒரு ஐ. என். ஓ. வை, வைத்துக்கொள்ளக் கூடாது என்று கேட்கிறேன். இதில தவறு என்ன இருக்க முடியும்.

**மதிமிகுந்த மதுரை மக்களே!**

இந்த வேலையைத்தான் தி. மு. கழகம் செய்துவருகிறது: அதற்காகவே உங்கள் அன்பைப் பெற வேண்டுமென்று விரும்புகிறது. மதிமிகுந்த மதுரை மக்களே உங்களை அன்போடு அழைக்கிறேன். உங்கள் ஆதரவைத் தாருங்கள் என்று. நீங்களே திட்டம் தீட்டித்தாருங்கள். ஆட்சேபணை இல்லை. நமது நாடு விவசாயிகளையும், நெசவுத் தொழிலாளர்களையும் நிரம்பிய நாடு. இந்தத் தொழில் நசித்துப் போகாதவாறு காப்பாற்ற வேண்டுமானால், நிச்சயம் நமக்கு ஒரு எல்லைக்கோடு தேவை, அதுதான் திராவிட நாடு திராவிடர்க்கே என்பது. இந்தத் திட்டத்தை உங்கள் முன் வைக்கிறேன். இதில் கட்சி வேறுபாடின்றி காங்கிரஸ், சோஷலிஸ்டு கட்சி மற்றுமுள்ள கட்சிக்காரர்கள் சிந்திக்க வேண்டுகிறேன். பின்னால் நல்லதோர் முடிவிற்கு வாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**படித்த பார்ப்பனர்களுக்கு**

இன்று படித்த பார்ப்பன மாணவர்களையும் அழைக்கிறேன். மாணவர்கள் ஜாதி பேதத்தை ஒழிக்க முன் வந்தால் அது மகிழ்ச்சிக்குரியது நாங்கள் யாருக்கும் எதிரிகளல்ல.

என் மீது 24-ந் தேதி திருச்சியில் ஓர் வழக்கு விசாரணை இருக்கிறது. இந்த வழக்கால் நான் மூன்று ஆண்டு சிறைச்சாலைக்கு அனுப்பப்படலாம், எனது 'திராவிட நாட்'டிற்கு 3 ஆயிரம் ஜாமீன், 'விடுதலை'க்கு 10 ஆயிரம் ஜாமீன் 'குடி அரசுக்கு' 3 ஆயிரம் ஜாமீன். நான் எழுதிய 'ஆரிய மாயை' தடை செய்யப்பட்டது. நண்பர் ஆசைத்தம்பி எழுதியபுத்தகத்திற்குத்தடை. புலவர் குழந்தை எழுதிய 'இராவண காவியம்' தடை செய்யப்பட்டது. ஒரு தோழர் எழுதிய புத்தகம், எழுதிய தோழர் இறந்துவிட்ட பின்னர் சர்க்கார் அவர் மீது சம்மன் பிறப்பித்துள்ளது இவைகள் எதைக் காட்டுகின்றன.

நாங்கள் பார்பனத் துவேஷிகள் அல்ல என்பதைநிரூபிக்க, சென்னை ஹைகோர்ட்டில் ஓர் மனுவைத் தாக்கல் செய்தேன் 'திராவிடநாடு' ஜமீனுக்காக. என்னுடைய மனுவை எடுத்துக்கொண்டு தோழர் பி. வி. ராஜமன்னார் அமர்ந்தார் நீதிபதியாக. அவருக்கு பக்கத்தில் பஞ்சாபிகேச ஐயர் என்ற பார்ப்பனர் ஒரு நீதிபதி.

அட்வகேட்ஜெனரல் ராஜா ஐய்யர் எனது கட்டுரையின் இரு பகுதி பார்ப்பனர்களைத் தாக்குகிறது என்று வாதிட்டார். உடனே நீதிபதி கேட்டார் எப்பொழுதோ ஏற்பட்ட இந்த பார்ப்பனீய முறை எப்படிப் பார்ப்பனர்களை மட்டும் பாதிக்கும் என்று கேட்டார். அத்துடன் பார்ப்பனீயத்தைப் பின்பற்றும்பார்ப்பனர் அல்லாதாரும் இருக்கத்தானே செய்கிறார்கள் என்று கேட்டார். அட்வகேட்-ஜெனரல் ராஜா அய்யர், "ஆம்" என்றார். உடனே பஞ்சாபிகேச ஐயர் சொன்னார், அண்ணாத்துரை தனது கட்டுரையில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட பார்ப்பனீயத்தைத்தான் கண்டித்தாரே தவிர, இன்றுள்ள பார்ப்பனர்களை அல்ல என்று கூறி, ஜமீன்தொகையைத் திருப்பித் தருமாறு உத்தரவிட்டார்.

இந்த நேரத்தில் இந்த சர்க்கார் என்ன செய்திருக்க வேண்டும்? தங்கள் பேச்சிற்கு மாறுபட்டபோன நீதிபதிகளை நீக்கி இருக்கவேண்டும் இல்லையேல் தாங்களாவது ராஜினாமா செய்திருக்கவேண்டும், செய்தார்களா? (வெட்கம்—வெட்கம் என்று சரகோஷம்) உண்மையிலேயே நான் எழுதியதில் தவறு இருந்தால் அன்று இருந்த அகஸ்தியரும், வசிஷ்டரும்கோபப்பட்டிருக்க வேண்டும் என் மீது. ஆனால் அன்றிருந்த பார்ப்பன தருமத்தை யாராவது கடைபிடிக்கின்றார்களா?

பார்ப்பனர்களுக்கு "உசத்" காலம் என்று ஒன்று உண்டு இதன் பிரகாரம் இவர்கள் அதிகாலையில் எழுந்து பஞ்சாங்க பாராயணம் செய்ய வேண்டும். செய்கிறார்களா?

அதிகாலையில் எழுந்திருப்பார்கள் என்பது உண்மைதான். ஆனால் பஞ்சாங்கபாராயணம் செய்யவா? இல்லை! பெட்காபி அருந்துவதற்காக. மந்தரம் ஓதவா எழுந்திருப்பார்கள் இல்லை, அன்று காலை வெளிவந்த "Hindu" வைப் படிப்பதற்காக. செய்யலாமா இது போன்று?

இராஜகோபாலாச்சாரியார் தனது மகளை காந்தியார் மகனுக்குக் கட்டிக்கொடுத்தார். வரவேற்கிறோம். அருணா என்ற பார்ப்பன அம்மையார் ஆஸப்அலி என்ற முஸ்லீமை மணந்தார். பாக்கிஸ்தான் பிரதமர் லியாகத்அலி கூட ஒரு பார்ப்பன மாதைத்தான் மணந்துள்ளார். இதற்கு மனுதர்ம சாஸ்திரம் இடமளிக்கிறதா என்று கேட்கிறேன். இவர்கள் சாஸ்திரத்தின் பிரகாரம் இவர்கள் கடலைத் தாண்டலாமா? சர் சி. பி. இராமசாமி அய்யர் எத்தனை தடவை அமெரிக்காவுக்குச் சென்றார் இவர்களை மனுசாஸ்திரப்படி பார்ப்பன சமூகத்திலிருந்து தள்ளி இருக்க வேண்டுமே. செய்தார்களா இல்லை. அதற்குப்பதில் ராஜ ஜிக்குப் பூமாலைகளைப் போட்டு பாராளுமன்றத்திற்குள் கவர்னர்-ஜெனரலாக தள்ளினார். (கைதட்டல்)

ரோம் நாட்டிலே பிளவியன், பெட்ரிசன் என்ற இரு பிரிவு போட்டியிட்டுக்கொண்டிருந்தன. இதனால்தான் அங்கு ஜாதிப்பூசல் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தன. நாங்கள் இந்த முறையைத்தான் கண்டித்தோம். இதுபோன்ற காரியத்தில்பார்ப்பனமாணவர்கள் எங்களுடன் ஒத்துழைத்தால் என்ன?

எங்களிடையே உள்ள ஜமீந்தார்களையும், பணக்காரர்களையும் நீங்கள் கண்டியுங்கள் வரவேற்கிறோம் இதற்காக நம்முடைய காலத்திலேயே நாம் ஒத்துப்போக வேண்டாமா?

**நாம் என்ன செய்தோம்?**

இன்று நாம் என்ன செய்தோம் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். நான் பசும் இந்த "மைக்" வெளிநாட்டானால்செய்யப்பட்டது. ஆளில்லா விமானத்தைக்கண்டு பிடித்தான், சந்திர மண்டலம் வரை சென்று வர ஒத்திகை பார்த்தான், விஞ்ஞானத்தைக் கொண்டு மழையை வருவித்தான், இன்னும்நமக்கு தேவையான பல பொருள்களை அவன் நமக்குச் செய்து தந்தான், நாம் என்ன செய்தோம் தமிழ்நாட்டுக்கருவிகள்? பாரதி சொன்னார், காகிதம் செய்வோம், நல்ல ஆயுதம் செய்வோம் என்று. இன்று நாம் குத்துவிளக்கை பார்க்கிறோம், தெப்ப உற்சவம் தவறாது நடத்துகிறோம், கட்டடங்கள் உடைக்கப்பட்டுயுள்ளோம் இது தவிர வேறு என்ன செய்ய முடிந்தது.

**கடவுள் துவேஷியா நாம்?**

இன்று நாட்டிலே தண்ணீர் இல்லை, அதனால் விளைச்சல் சரிவர இல்லை. மழை இல்லாத காரணத்தால், மக்களைப் பார்த்து ஜெபம் பண்ணுங்கள் என்று சர்க்கார் கூறுகிறது இதனால் கொஞ்சம் பணத்தைச் செலவுசெய்தபின்னர் இந்த முறை வேண்டாம் என்று கூறிவிட்டனர். இந்த முறையைக் கண்டிக்கும் எங்களைக் கடவுள்-துவேஷி என்கின்றனர்.

நாங்கள் கடவுள் துவேஷி என்றால் எங்களுக்குக் கடவுள் இவ்வளவு சமபத்தைத் தந்திருப்பாரா? படிக்க வேண்டுமென்று விரும்பினேன் எம். ஏ., வரை படிக்க வைத்தார். எங்கள் தலைவருக்கு மூன்றடுக்கு மாடி வீட்டைத் தந்தார். மற்றும் எங்களுக்கு யாதொரு விதமான அங்கஹீனமும் இல்லை. ஆனால்...

பக்தர்கள் பலரைத் தான் கண் இல்லாது கால் இல்லாது செய்துள்ளார் கடவுள். (கைதட்டல்) எங்களை அவர் கடவுள் துவேஷி என்று கூறவே மாட்டார்.

ஒரு காலத்தில் ரோம் மக்கள் இதுபோன்ற கடவுள்களை நம்பிக்கொண்டிருந்தனர். வீனஸ், அபோலா, ஜூபிடர், மினர்வா என்பன போன்ற கடவுள்கள் எல்லாம் என்ன ஆயிற்று? 'ஜூபிடர்' கோவையிலே படப்பிடிப்புச் சாலைக்குப் பெயர். மினர்வா சென்னையிலே சினிமா தியேட்டரின் பெயர், அபோலோ நாம் சவாரி செய்யும் சைகிளின் பெயர், இந்தக் கடவுள்களின் கதி ஏன் இப்படிப்போயிற்று (கைதட்டல்)

**சோம்பேறிகள் வாழும் நாடு**

இன்று நம் கடவுள் பேரைச் சொல்லி, தெருக்கோடியிலே உட்கார்ந்து கொண்டு பண்டரிபுரம் எத்தனை தூரம் என்று பாடுகிறான் பரதேசி. ரெயில்வே அட்டவணையைப் பார்த்தால் எத்தனை மைல் என்பது தெரியுமே! (பலத்த கை தட்டல்) அதுமட்டுமல்ல. அவன் உட்கார்ந்தபடியே கை கால் நோகுதே, பசி அதிகமாகுதே என்கிறான். இது என்ன ஆண்டவன் பெயரால் நடக்கும் மோசடி தானே. இந்த முறையைக் கண்டிக்கிறோம். அஞ்ஞானம் ஒழிந்து, மெஞ்ஞானம் நிலவ வேண்டுமென்று நாங்கள் கூறுகிறோம். இது போன்ற சோம்பேறிகளை ஒழித்து, ஆண்டவன் இருப்பிடத்தை அசுத்தப்படுத்த வேண்டாம் என்று தான் கூறுகிறேன்.

**நன்றிகெட்ட உலகம்!**

கிரேக்க நாட்டு மக்களுக்காக அல்லும் பகலும் உழைத்தார் சாக்ரட்டீஸ் என்ற அறிஞர். அவருக்கு உலகம் தந்த பரிசு சாவிலே விஷக்கோப்பை. அப்பொழுது சொன்னான் இந்த நாடு

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

# கடும் போருக்கு அஞ்சாத்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்குப் பகுத்தறிவு என்ற கோடரியைத் தந்து விட்டேன். இனி அது பரவும் என்று கூறிவிட்டு, எனக்குத் தாருங்கள் விஷக் கோப்பையை என்றான். உலகம் உருண்டை என்று கூறிய தற்காக கலிலியோ தூக்கிலிடப்பட்டார். அறிவுப் புரட்சி செய்ததற்காக ஆபிரகாம் லிங்கன் அந்த நாட்டு மக்களால் வெறுக்கப்பட்டான். எனவே, இங்கேயும் இதுபோன்று தந்தி என்ற பெயரால் எங்கள் மீது வதந்தி கிளப்பப்படுகிறது.

இந்த வேலை நீடிக்க முடியாது. விஷம் தந்த மக்கள், தூக்கிலிட்ட கொடியவர்கள் பிறகு தனது குற்றத்தை உணர்ந்து மன்னிப்பு கேட்டது போன்று, இவர்களும் திருந்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இதற்காகவே தி. மு. கழகம் பாடுபடுகிறது, மந்திரி வேலைக்கு அல்ல.

**ஒரு நாளைக்கு அரசன்**

காமராஜர் திருச்சியில் பேசும்போது என்னிடம் மூன்று நாளைக்கு அரசாட்சியைத் தருவதாகவும், அதை நம்மால் சரிவர நடத்த முடியாது என்றும் கூறினாராம், இதைக் கண்ட எனக்கு ஒரு படக்காட்சியின் நினைவுதான் வருகிறது. அதாவது ஒரு நாளைக்கு அரசன் என்ற படத்தில் வருவதுபோல், எங்களை மூன்று நாளைக்கு அரசராக்குகிறேன் என்கிறார் காமராஜர்.

பல காலம் பதவியிலிருந்து வரும் அவருக்கே ஒரு மந்திரி பதவி கிடைக்கவில்லை! அவர் எங்களுக்கு மந்திரி பதவி தருகிறாராம்.

இன்று சர்க்கார் ... முதலாளி ... கையில் சிக்கி விட்டது. நேரு அமெரிக்க செல்லும்போது 'கள்ளமார்க்கட்காரர்களே நீங்கள் ஏதாவது சர்க்காருக்குத் தாருங்கள்' என்று மிகவும் தாழ்ந்த குரலில் பேசினார். ஆனால் முன்பெல்லாம் கள்ளமார்க்கட்காரர்களைத் தூக்கில் போடுவேன் என்று பேசினார். எங்காவது கள்ளமார்க்கட்காரன் வந்து தானாகவே பணம் தருவார்களா? கள்ள மார்க்கட் என்றால் கணக்கு இல்லாதவன் என்று பொருள், இவர்களிடம் பணம் எதிர்பார்க்க முடியாது. எனவே இனி ஒவ்வொரு நகரிலும் உள்ள போலீஸ் ஸ்டேஷனில் திருடர்களே நீங்களாகப் பார்த்துக் கொஞ்சம் பணம் தாருங்கள் போலீஸாருக்குச் செலவிற்கு வேண்டும் என்று, நடுநிசி உழைப்பாளிகளை வேண்டிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. (கை தட்டல்)

**தொழில் வளம் வேண்டும்**

ஒரு அமெரிக்கா சென்றார் அப்பொழுது அந்த சர்க்காரிடம் பணம் கேட்டார். ஏன் இந்த நாட்டில் பணம் இல்லையா? காஷ்மீர் போராட்டத்திற்காகவும், அதைத் தீர்த்து வைப்பதற்காகவும் செலவு செய்யப்படும் பணத்தை மீதப்படுத்த வேண்டும். அதன் மூலம் இந்த நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும். இன்று இந்த நாட்டில் தொழில் செய்ய வசதி இல்லை. இந்தத் தொழில் வளம் பெருகவேண்டுமானால், திராவிட நாட்டின் அதிகாரம் நம் கையில் கிடைக்க வேண்டும்.

**பயமறியாத் தமிழன்......!**

பயமறியாத தமிழன் இன்று தனது சக்தி இழந்து வெளி நாடுகளில் கூலியாகவும், ரப்பர் தோட்டத்திலே கங்காணியிடம் கசையடிபட்டும், மூட்டை தூக்கியும், கல்லுடைத்தும் கஷ்டப்படுகிறான். இந்நேரத்தில் வங்காளியோ, மார்வாரியோ, பஞ்சாபியோ, அங்கு சென்றிருப்பானா? சென்றிருந்தால் வட்டிக் கடை வைக்கவும், இராணுவத்தில் இருக்கவுந்தான் சென்றிருப்பான். கஷ்டப்பட அல்ல. இவர்களுக்குச் சரித்திரம் இல்லை. வளமிக்க நாடு இல்லை. ஆனால், சரித்திரம் உண்டு. சேரன் அவன் பரம்பரை, சோழன் அவன் மூதாதை பாண்டியன் அவன் வம்சம் அவனுக்குத் தமிழ் என்ற மொழி உண்டு. இலக்கியம் உண்டு அவன் கட்டிய கோபுரம் வானை முட்டும். அவன் நாட்டு தமிழ் மொழியிலே தேன் சொட்டும். இதுதான் தமிழன் பரம்பரை. இந்தத் தமிழனுக்கு இன்றுள்ள நிலை என்ன? இவைகளை மாற்ற வேண்டும். அதற்காகவே உங்களை அழைக்கிறேன். வஞ்சமே உருவாகிய நரிக்கு ஒரு புதர், கண்டவுடன் ஆட்களைக் கொல்லும் புலிக்கு ஒர் இடம், விஷத்தைக் கக்கிக்கொண்டுள்ள பாம்பிற்கும் இருக்கப் புற்று இருக்கும்போது 4 கோடி தமிழன், முன்னாளில் ஒன்றாக வாழ்ந்த இனம், இவர்களுக்கு ஓர் தனிநாடு தேவை என்றால் இதில் தவறு இருக்க முடியாது. இந்த வேலையை நீங்கள் நாட்டிலே பரப்புங்கள். யாராவது கோபத்தைக் காட்டினால் நீங்கள் புன்முறுவலைக் காட்டுங்கள். தெரியாத மக்களுக்கு விளக்கம் தாருங்கள். ஆத்திரப்பட்டால் நீங்கள் அன்பைக் காட்டுங்கள் என்று கூறிக்கொண்டு, இவ்வளவு மகத்தான கூட்டத்தை கூட்டியதற்காக என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறி முடித்தார்.

உடனே அண்ணாத்துரை வாழ்க என்றஒலிகிளம்பப்பட்டது. அண்ணாதுரை அவர்கள் காரில் ஏறி தனது ஜாகைக்குச் சென்றார்கள். கூடி இருந்த கூட்டம் கலைவதற்கு அரை மணி நேரம் பிடித்தது என்றால் அது மிகையாகாது.

(ந, ச.)

---

## எங்களுக்கும் அரசியல் உரிமை வேண்டும்!

### ஜார்டன் பெண்கள் கோரிக்கை

அம்மான், பிப். 16—

இதர அரபுநாடுகளிலுள்ள பெண்களைப் போல ஜார்டன் பெண்களும் தங்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்படவேண்டும் என்று கோருகின்றனர். வரப் போகும் பொதுத் தேர்தலில் வோட்டுரிமை தங்களுக்கு வேண்டும் என்று இவர்களுடைய ஸ்தாபனங்கள் ஜார்டன் ... சர்க்காருக்கு மகஜர் சமர்ப்பித்திருக்கின்றன.

---

## வாணியம்பாடி வெள்ளி விழா

வாணியம்பாடி, பிப். 13—

நேற்று மாலை 5 மணிக்கு இஸ்லாமிய ஹைஸ்கூல் காம்பவுண்டில் அமைக்கப்பட்டிருந்த சிங்காரப்பந்தலில், ஹை ஸ்கூல் தலைமையாசிரியர் ஜனாப் கே. அப்துல் கொத்தூஸ் சாயபு பி. ஏ. எல். டி. அவர்களின் 25 ஆண்டுகள் சேவையைப் பாராட்டி வெள்ளி விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கூட்டத்திற்கு சுமார் 7000 பேருக்கு மேலாகவும் பெண் மக்கள் நூற்றுக் கணக்கிலும் வந்திருந்தார்கள்.

கல்வி மந்திரி கனம் கே. மாதவமேனன் அவர்கள் தலைமை வகித்தார். முன்னுரையில் நான் இம்மாதிரியான அதிக சிறும் சிறப்புமாக ... பெறும் என்று எதிர்பார்க்கவில்லை யென்றும், இம் மகத்தான மாபெரும் கூட்டம் கொண்ட வெள்ளி விழா எங்கும் நடைபெற்றிருக்காது என்றும் புகழ்ந்து, தலைமை ஆசிரியர் சேவையைப் பாராட்டிப் பேசினார். தோழர் வி. எஸ். விஸ்வநாதம் எல்லோரையும், கனம் மந்திரியையும் வரவேற்றுப் பேசினார். தோழர் வி. எம். ... ராமசாமி முதலியார் எம். எல். ஏ. அவர்கள் ஹை தலைமையாசிரியரின் உருவப் படத்தைதிறந்துவைத்தார்.

இஸ்லாமியா காலேஜ், பிரின்சிபால் ஜனாப் அப்துல் காதர்சாயபு, எம் ஏ. டாக்டர் ஸொராப் பேகடி. எம். அன்றோ எஸ். ஆலிமாசக்கர் பி. ஏ. பி. டி, இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி எம்.ஏ. முதலியவர்கள் ஆசிரியரின் சேவையைப் புகழ்ந்து பாராட்டிப் பேசினார்கள்.

தலைமை ஆசிரியர், ஜனாப் கே. அப்துல் கொத்தூஸ் சாயபுவுக்கு உபசாரப்பத்திரங்கள், வாசித்தளிக்கப்பட்டு, வெள்ளி கோப்பைகளும் கேடயமாகும், பரிசளிக்கப்பட்டது பழையமாணவர்கள் சார்பாக (5001) ஐயாயிரத்து ஒரு ரூபாய் கொண்ட பணமுடிப்பு கொண்ட பணமுடிப்பு அளிக்கப்பட்டது. மற்றும் ஹை ஸ்கூலில் 25 ஆண்டு காலமாக சேவை செய்துவரும் ஆசிரியர்களான திரு. எஸ். ... ராவ், ஜனாப் சுலைமான் சாயபு, ஜனாப் நசரத்தான் சாயபு முதலானவர்களுக்கும், பணமுடிப்புகளும், உபசார பத்திரங்களும் அளிக்கப்பட்டன.

தலைமை ஆசிரியரும் இதர ஆசிரியர்களும், தங்களுக்கு அளித்த கௌரவத்திற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். பழைய மாணவரும் ஜில்லாபோர்டு அங்கத்தினருமான ஜனாப் எம். முகம்மது அபிப சாயபு பி. ஏ. பி. எல். அவர்களால் நன்றி கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

---

## திருச்சி மாவட்ட தி. மு. கழகம்

### அறிவிப்பு

மார்ச்சு மாத இரண்டாவது வாரத்திலிருந்து மூன்று வாரத்திற்கு வேலூர் தோழர் சி. பி. சிற்றரசு, தோழர் ஜி. பராங்குசம் அவர்களும் திருச்சி மாவட்டத்தில் கழகப் பிரச்சாரத்திற்கென சுற்றுப்பயணம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆகவே கூட்டங்கள் நடத்தவேண்டுமென்று விரும்பும் உள்ள கிளைக்கழகத் தோழர்கள் இம் மாதம் 24-ந் தேதிக்குள் (24-2-50) கீழ்க்கண்ட செயலாளர் மூலமாகத் தெரியப்படுத்தவேண்டும்.

பின் அந்தந்த ஊர்களுக்கு வரும்தேதி முடிவு செய்யப்படும்.

முகவரி:—

செயலாளர்

திருச்சி மாவட்ட தி. மு. கழகம்

... ... ...

தென்னூர் ... P. O. திருச்சி.

---

# தி. மு. கழகக் கூட்டங்கள்

**18 - 2 - 50**

நேகமம் :— சி. பி. சிற்றரசு, ஜி. என். இராஜு

**19 - 2 - 50**

தாத்தையங்கார்பேட்டை (மாலை 4 மணிக்கு) :— துறையூர் (மாலை 6 மணிக்கு) } இரா. நெடுஞ்செழியன், ஜி. பராங்குசம்

தூ...க்குடி :— என். எஸ். இளங்கோ, எஸ் ஓ வெற்றிவேல், இரா சு. தங்கப்பழம்

**20 - 2 - 50**

அரியலூர் : சி. பி. சிற்றரசு

கல்லிடைக்குறிச்சி :— என். எஸ். இளங்கோ, எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம்.

---

## இனி நடப்பவை

சென்னை — முத்தியாலுப் பேட்டை, திருவள்ளுவர் இளைஞர் கழகத்தின் சார்பில், 19-2-50 ஞாயிறு காலை 10-மணிக்கு புதுத் தெரு 94-95 என்னுள்ள இராஜமன்னார் பாடசாலையில் திருக்குறள் வகுப்பு நடைபெறும். புலவர் கி. சண்முகம் "வாய்மை" என்ற அதிகாரத்தின் முன் ஐந்து பாக்களை விளக்கிப் பேசுவார்.

* * *

சென்னை —... சென்னை மீன் பிடிப்போர் சங்கக் கூட்டமொன்று 17—2—50 மாலை 6-மணிக்குக் காசிமேடு மீன்பிடிப்போர் இளைஞர் கழகக் கட்டிடத்தில் நடைபெறும். தோழர்கள் என். ஜீவரத்தினம் எம். சி., எஸ். ஆர். சண்டோ சண்முகனார், ஏ. செல்வராஜ் மற்றும் பலர் பேசுவர்.

* * *

சென்னை:—ஓட்டேரி தி. மு. க. சார்பில், 19—2—50 ஞாயிறு காலை 10 மணிக்கு, புலவர் வே. த. அர்ச்சுனனார் அவர்களால் குறள் வகுப்பு நடத்தப்பெறும். இடம்: 21. ஜமீரிக்லின் வீதி ஓட்டேரி சென்னை.

* * *

சென்னை:—அனைத்திந்தியக் குடியரசுக் கட்சியின் கூட்டமொன்று 17—2—50 வெள்ளி மாலை 6 மணிக்கு சென்னை கோகலேமண்டபத்தில் நடைபெறும். அதுபோது தோழர்கள் எச் டி. ராஜா, எஸ். ராமனுஜன் மற்றும் பலர் 'கட்சியின் நோக்கம்' குறித்துப் பேசுவர்.

* * *

கோவை:—19—2—50 காலை 10-30 மணியளவில், கோவை நகர தி. மு. கழகக் கட்டிடத்தில் சொற்பயிற்சி நடைபெறும். அதுபோது 'குடியரசு சட்ட திட்டங்கள்' என்பதைப்பற்றி சொற்போட்டி நடைபெறும்.

* * *

திருப்பூர்:—நல்லூர் தி. மு. க. செயற்குழுக்கூட்டம், 19-2—50 அன்று மாலை 6 மணிக்கு மணி மண்டபத்தில் நடைபெறும். தோழர் கே. எஸ். அப்துல்காதர் தலைமை வகிப்பார். அதுபோது வைத்திய வள்ளல் ந. வே. கி. அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கவும், இன்னும் பல முக்கிய பிரச்னைகளைப் பற்றி முடிவு செய்யவேண்டியிருப்பதால் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

* * *

சென்னை:—டாக்டர். சி. நடேசன் மன்றத்தின் சார்பாக 19-2-50 ஞாயிறு காலை 9 மணிக்கு ... ... திருக்குறள் வகுப்பு நடத்தப்பெறும்.

---

## தமிழ் வளர்ச்சிக் கழகம்

### நான்காவது பரிசுத் திட்டம்

சென்னை, பிப். 16—

தமிழ் வளர்ச்சிக் கழகம் ஆண்டுதோறும் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கி வருகிறது. அதன்படி 3-ம் பரிசுத்திட்டத்திற்குரிய பரிசு நூல்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றுவிட்டன. அவற்றின் ஆசிரியர்களுக்குக் கோவையில் நடைபெறவிருக்கும் தமிழ்த்திருவிழாவிலே பரிசுகள் வழங்கப்பெறும்.

இப்பொழுது 4-வது பரிசுத் திட்டத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அதற்கு 1948—49 ஆண்டுகளில் வெளியான எல்லா நூல்களிலும் இரண்டிரண்டு பிரதிகள் கழகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். முன்பே பல வெளியீட்டகங்களும ஆசிரியர்களும் நூல்கள் அனுப்பியிருக்கிறார்கள். அவ்வாறு அனுப்பியவர்களும் மறுபடியும் அவற்றை அனுப்பவேண்டியதில்லை. இதுவரை அனுப்பாதவர்கள் மார்ச் மாதம் 7-ந்தேதிக்குள் செயலாளர், தமிழ் வளர்ச்சிக் கழகம்-பல்கலைக் கழகக் கட்டிடம் சேப்பாக்கம், சென்னை-5, என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். குறித்த தேதிக்குள் அனுப்பப்பட்ட நூல்களைத் தான் பரிசிலனையில் சேர்த்துக் கொள்ள இயலும். புத்தகங்கள் வெளியானவுடனே அவற்றின் இரண்டு பிரதிகள் அனுப்பிவைத்து விட்டால், அவற்றை எந்த எந்தப் பரிசுத்திட்டத்தில் சேர்க்க வேண்டுமோ அவ்வாறு சேர்த்துக் கொள்ள வசதியாக இருக்கும்.

மொழிபெயர்ப்பு நூல்கள் சாதாரணமாகப் பரிசுத் திட்டத்தில் இடம் பெறா. ஒரு தடவை பரிசுத் திட்டத்தில் சேர்ந்த நூல்கள் மறுபடியும் அதில் சேரா. ஆனால் அவற்றை மாற்றியோ அபிவிருத்தி செய்தோ மறுபதிப்பாக வெளிவந்த நூல்களும் பரிசுக்கு அனுப்பப்பெறும் நூல்களின் மறுபதிப்பு 1948—49 ல் வெளியாகியிருந்தால் அவைகளும் பரிசிலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். தமிழ்நாடு அல்லாத வேறு மாகாணங்களிலும், இலங்கை முதலிய இடங்களிலும் வெளியான தமிழ் நூல்கள் பரிசிலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும் என கழகச் செயலாளர்கள் அறிவிக்கின்றனர்.

---

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1